STC. No. : 311/2021

PW1 : கொடி சந்திரசேகரன், த/பெ. கொடி வைரத்தேவர்

Date : 19.01.2024.

**குறுக்கு விசாரணை**

சுமார் 25 வருடங்களாக நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்யவில்லை. நான் செக்கானூரணி மற்றும் மதுரையில் அலுவலகம் வைத்து வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. செக்கானூரணியில் கங்கா பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் பங்குதாரராக இருந்து கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் கடந்த 3 வருடங்களுக்கு முன்பு அதிலிருந்து விலகிவிட்டேன். நான் அதிலிருந்து விலகுவதற்கு முன்பு சுமார் 12 வருடங்கள் பங்குதாரராக மேற்படி நிறுவனத்தில் இருந்தேன். மேற்படி கங்கா பைனான்ஸ் நிறுவனத்திற்கு அலுவலகமும், பணி ஆட்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி அலுவலகத்தில் வரவு, செலவு கணக்குகளை பராமரிக்க Ledger Book இருந்தது என்றும், ஆவணங்களை பராமரிக்க தொகுப்புகள் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வசிக்கின்ற வீட்டில் வைத்து பணம் கொடுக்கல், வாங்கல் செய்வதில்லை என்றால் சரிதான். நான் வருமானவரி கட்டி வருகிறேன். நான் வருடந்தோறும் Auditor மூலம் வருமான வரி Return செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் மேற்படி கம்பெனியிலிருந்து விலகியபின் என் தனிபட்ட வரவு செலவு கணக்குகளுக்கு பேங்க் ஸ்டேட்மண்ட் உள்ளதா என்றால் உள்ளது. எனது பால் வியாபாரம், தேங்காய் வியாபாரம், ரியல் ஸ்டேட் மூலம் வரும் வரவு செலவுகளில் சிலவற்றிற்கு ஆவணங்கள் உள்ளது சிலவற்றிற்கு ஆவணங்கள் இல்லாததால் வாய்மொழியில் Auditor-யிடம் தெரிவித்துள்ளேன். சிறு தொகையை வாய்மொழியாகவும், லட்ச கணக்கில் பண பரிமாற்ற செய்த தொகைகளை

ஆவணங்கள் மூலமாகவும் Auditor-யிடம் தெரிவிப்பேன் என்றால் சரியல்ல. என்னுடன் பழகியவர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு லட்ச கணக்கில் கடன் கொடுத்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் தேவையின்போது நான் உதவி செய்துள்ளேன். மேற்படி நபர்களுக்கு தவணை முறையிலோ, வட்டிக்கோ கடன் கொடுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் பழகியவர்களுக்கு தேவைபடும்போது உதவி செய்துள்ளேன். அவர்கள் திருப்பி தரும்பொழுது வாங்கிகொள்வேன். வட்டி எதுவும் நான் வாங்கியது கிடையாது. அவர்களாக எதாவது சேர்த்து கொடுத்தால் வாங்கி கொள்வேன். அவ்வாறு எந்த நண்பர்களுக்கு எவ்வளவு பணம் என்றைக்கு கொடுத்தேன் என்றும், அவர்கள் எனக்கு எந்த தேதியில் திருப்பி கொடுத்தார்கள் என்றும் அவர்களால் எனக்கு விருப்பப்பட்டு கூடுதல் தொகை எவ்வளவு கொடுத்தார்கள் என்றும் கணக்கு வழக்குகள் உள்ளதா என்றால் இல்லை. எனது மனதில் குறித்து கொள்வேன். செக்கானூரணியில் நடந்த கங்கா பைனான்ஸ் நிறுவனத்தின் பல நபர்களுக்கு பலவிதமான வட்டி விகிதம் வைத்து பல தொகைகள் கடனாக கொடுத்து நிறுவனத்தை நடத்திவந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. செக்கானூரணியில் உள்ள கங்கா நிறுவனத்திற்கு நான் பங்குதாரராக இருந்த சமயத்தில் போய் வந்துள்ளேனா என்றால் 2 மாதம் அல்லது 3 மாதத்திற்கு ஒருமுறை செல்வேன். அந்த அலுவலகத்தில் 2 நபர்கள் வேலை பார்த்தார்கள். அதுபோக மற்ற பங்குதாரர்கள் வந்து செல்வார்கள் என்றால் சரிதான். நான் சென்றுவந்த சமயத்தில் மேற்படி நிறுவனத்தில் காசோலை, ப்ரோ நோட், பத்திரங்கள், லெட்டர் பேடு, ரசீதுகள் ஆகியவை பராமரிக்கப்பட்டதா என்றால் வரவு செலவுகள் கணக்குகள் பராமரிக்கப்பட்டது, மற்ற விபரங்கள் தெரியாது. மேற்படி நிறுவனத்தில் சிறுதொகைகள் நபர்களின் அறிமுகத்தை வைத்து கொடுப்பார்கள் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தில் பெரிய அளவில் பணம் கடனாக கொடுக்கும்போது காசோலை, ப்ரோ நோட், பத்திரங்கள் ஆகியவைகளை வாங்கிகொண்டுதான் பணம் கடனாக கொடுப்பார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நிறுவனத்திலிருந்து விலகுவதற்கு முன்பும் பின்பும் எனக்கு பழக்கமானவர்கள், சுமார் 15 நபர்களுக்கு பண உதவி செய்துள்ளேன். மேற்படி 15 நபர்களுக்கு பண உதவி செய்தபோது காசோலை, ப்ரோ நோட், பத்திரங்கள் வாங்கினேனா என்றால் சிலநபர்கள் அவர்களாவே

என்னிடம் பண உதவி கேட்கும்போது, மேற்படி ஆவணங்களை கொடுத்துள்ளார்கள். மேற்படி நபர்கள் எனக்கு பணத்தை எந்த தவணையில் செலுத்தினார்கள் என்றால் அவர்களின் வசதியை பொறுத்து செலுத்தினார்கள். மேற்படி 15 நபர்கள் எனக்கு பணத்தை திருப்பி செலுத்தியபோது அவர்களாக விருப்பப்பட்டு கூடுதல் தொகை எந்த சதவிகிதத்தில் கொடுத்தார்கள் என்றால் எல்லோரும் கொடுக்கவில்லை, ஒருசிலர் மட்டும் 1.5 % to 2.0 % சதவிகிதம் கூடுதல் தொகை கொடுத்துள்ளார்கள். நான் பண உதவி செய்தபோது வட்டி என்று ஒரு தொகையை கழித்து கொண்டு கொடுத்தது இல்லை என்றாலும், பணத்தை திரும்ப பெறும்போது வட்டி பெற்றதில்லை என்றாலும் சரிதான். எதிரியை எனக்கு 2015 ஆம் ஆண்டிலிருந்து தெரியும் என்றால் சரிதான். எதிரி ஆரம்பத்தில் மதுரை வடக்கு மாசி வீதியில் J.J Traders என்ற நிறுவனம் நடத்தி வந்தார் என்றும், பின்னர் மதுரை, அரசரடியில் பெனிட் அன்கோ என்ற நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தை நான் சென்று பார்த்துள்ளேன். 2015 முதல் 2017 வரை பலதடவை எதிரிக்கு பணம் கொடுத்து வாங்கியுள்ளேன் என்றால் சுமார் 3 அல்லது 4 முறை பணம் 2015 முதல் 2016 வரை கொடுத்து வாங்கியுள்ளேன். மேற்படி காலகட்டத்தில் எதிரி தொழில் நல்லபடியாக செய்ததால் மேற்படி 3 அல்லது 4 முறை பணம் கொடுத்து வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில் எதிரியிடமிருந்து காசோலை, ப்ரோ நோட், பத்திரங்கள் வாங்கவில்லை என்றால் சரிதான். அதிகபட்சமாக சுமார் ரூபாய் 10 லட்சம் மேற்படி காலகட்டத்தில் கொடுத்திருப்பேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி காலகட்டங்களில் எதிரி அனைத்து தொகையையும் திருப்பி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி காலகட்டங்களில் எதிரியிடம் மேற்படி தொகைக்கு இவ்வளவு வட்டி என்று நான் வாங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரங்களை எனது புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆவியூரை சேர்ந்த அம்மையப்பன் என்ற ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் நபரை தெரியும் என்றால் சரிதான். மேற்படி அம்மையப்பன் மூலமாக எதிரியின் நிலத்தை நான் கிரையம் வாங்கியுள்ளேன். இவ்வழக்கில் எதிரிக்கு பணம் 49 லட்சம் கொடுத்தபோது எவ்வளவு வட்டியுடன் எதிரி திருப்பி தரவேண்டும் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி 2015, 2016 காலகட்டத்தில் பண பரிவர்த்தனையின்போது எனக்கும்

எதிரிக்கும் எந்த மனகசப்பும் இருந்தது இல்லை என்றால் சரிதான். 2017 முதல் 2020 ஆம் வருடத்தில் எதிரியிடம் எந்த பணம் கொடுக்கல் வாங்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.